481

The Registrar of Books,
Madras 6.

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—௫ | குருகுலம், மாம்பாக்கம்; கர, ஆடி; 20—7—51. | தளிர்—௬௰

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம் எந்நலத் துள்ளதூஉம் அன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

இயற்கை இன்பம்

மலர்கள், புற்றரைகள், நீர்ப்பரப்பு, நீலவான்வெளி என்னும் இவைகளின் தோற்றம் கண்டு நாம் இன்புறுகின்றோம். இளவேனில் மாலைகளில், தழைத்த மரங்களில் தென்றலால் அசையும் இலைகளின் அசைவும், நீல வானத்தின் அழகுக் காட்சியும் நம் உள்ளத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. தென்றலுக்குப் பேசுதற்குரிய நாவில்லை எனினும் அது, தன் போக்கிலேயே இனிதாகப் பேசி மெல்லெனத் தவழ்ந்தோடுகின்றது. சல சலவென்று ஓடும் நீரோடையின் ஒலியும் அதனருகில் வளர்ந்து முற்றிய மூங்கிற் றுளைகளில். காற்று நிறைந்து எழுப்பும் இனிய பாட்டொலியும் உறங்கிக் கிடக்கும் நம் உணர்ச்சியைத் தட்டியெழுப்பி, மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்தாடச் செய்கின்றன. உணர்வு வெள்ளத்தில் இரண்டறக் கலந்த நிலையில் நம் கண்களில் இன்பக் கண்ணீர் பெருகுகின்றது. அவ்வொலிகள், நம் காதலுக்குரியவர், தனிமையில் காதருகில் வந்து, மெல்லெனத் தீங்குரலால் இசைப்பது போன்று இனிக்கின்றன. இவ்வின்பங்களை நுகரக்கூடிய உணர்வுப்பண்பு மக்களாய்ப் பிறந்தார் எல்லார்க்கும் தேவை. இவ்வுணர்வு நீங்கிய நிலையில் மனிதன், தானியத்தில் உட்பொருள் கழிந்த வெறும் மேற்றோலை (உமியை) ஒத்தவனாகின்றான்.

(சி. து. க.) — Percy Bysshe Shelley.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4. தனித் தாள்—அணா 1

வறியாராக வந்து ஏற்கும் ஏழைகளுக்கு, அவர்களுடைய உள்ளக் குறிப்பினை அறிந்து தக்க முறையில் அவர்கள் விரும்பிய பொருள்களை ஈதலே ஈகை என்று சொல்லப்படும். இம் மாதிரி செய்யப்படும் ஈகை கைம்மாறு கருதிச் செய்யப்படுவதன்று. இஃதொழிந்த ஏனைய கொடைகள் யாவும் கைம்மாறு கருதிச் செய்யப்படுவன ஆகலானும், ஈவார்க்குத் தாம் ஈந்த பொருள்கள் அவ் வளவினால் மீண்டும் பெறக் கூடும் ஆகலானும் அவை ஈகை என்று சொல்லப்படா. இதனை வற்புறுத்தவே

வறியார்க்கொன் றீவதே ஈகைமற்
றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

என்ற பொய்யாமொழி எழுந்தது.

சிலர், தம் செல்வப் பெருக்கினை உலகுக்குக் காண்பித்தற்கும், வீண் ஆரவாரமான புகழ் மொழிகளைக் கேட்டு மகிழ்வதற்கும் தம் பொருள் களைத் தகுதியல்லாத வழிகளில் செலவிடுகின்றனர். தாம் வாழும் ஊரில், உண்ண உணவும் உடுக்க உடையும் அற்ற ஏழை மக்கள் பலர் இருப்பதை இத்தகையோர் அறிவதில்லை. ஒரு நாள் தவறாமல் தம் மாளிகை முன்பாக வாழ வகையற்ற ஏழைகள் பலர் தம் வறுமையின் கொடுமையால் 'பல் எல்லாம் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற்கூட்டி' அரற்றுவது இவர்கள் செவிகளில் விழுவதில்லை. தம்மை வெற்றுரைகளால் வான் அளாவப் புகழும் வீணர்களுக்கு மட்டும் பொருளைப் பெருவாரியாக வழங்குவதற்கு இவர்கள் தவறுவதில்லை. இச் செயல்களுக்காக இவர்கள் எதிர்பார்க்கும் பேரும் புகழும் அந் நிலையில் கிடைப்பது போற் காணப்படினும், அவை நாளாவட்டத்தில் மறைந்தொழியும் என்றும் இவர்கள் உணருவதில்லை. இன்னும் சிலர், இம்மையிற் செய்யும் ஈகையின் பயன் தம் மறுமை இன்பத்துக்குக் காரணம் ஆகும் என்று எண்ணுவதுண்டு. இவர்கள் அறத்தை விலை கூறும் வணிகர்க்குச் சமம் என்று பெரியோர் கருதுகின்றனர்.

ஈகையின் சிறப்பு

[சி. து. க.]

இம்மைச் செய்தது மறுமைக்
காமெனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்.

என்னும் புறநானூற்றடிகள் ஆய் அண்டிரன் என்னும் வள்ளல் 'அறவிலை வணிகன்' அல்லன் என்று கூறுவது கொண்டு இதனை உணரலாம்.

பழந்தமிழ் நாட்களில் வாழ்ந்திருந்த வள்ளல்களின் புகழ் இன்றும் நம்மவரிடையில் வாழ்கின்றது. இறவாத பெரும் புகழ் உடம்போடு இன்னும் அவ் வள்ளல்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் ஏதேனும் பயன் கருதி வறியாருக்கு வழங்கி இருப்பாராயின் அவர்களுடைய புகழும் பெருமையும் இன்று நம்மாற் பாராட்டும் நிலையில் நீடித்திருக்குமா?

ஈதல், ஏற்றல் ஆகிய செயல்கள் மிகப் பழைய காலந் தொட்டே சிந்தனைக் குரியனவாக மக்கள் மதித்து வந்திருக்கின்றனர். 'ஒருவரிடம் சென்று ஈயென இரத்தல் இழிவான செயல். அதற் கெதிராக ஈயேன் என்று கூறி வாழ்தல் அவ் விரக்கும் தன்மையைக் காட்டினும் மிகமிக இழிவானது. ஒரு பொருளைக் கொள்க என்று கொடுத்தல் உயர்வான செயல்தான். ஆனால் கொடுப்பதனைத் தம் பெருமை தோன்றுமாறு 'கொள்ளேன்' என்று கூறுதல் கொடுப்பதனைக் காட்டினும் மிகமிக உயர்வானது. நீர் வேட்கையுற்றோர், தெளி நீர்ப்பரப்பும் ஒலிக்கின்ற அலைகளையுமுடைய பெரிய கடலருகிற் செல்லினும், அதன் நீரினை விரும்பி யுண்ணார். உண்ணற்குரிய சிறிய நீர் நிலையானது பசுத்திரள்களும் பிற விலங்குகளும் சென்று நீருண்ணுவதால் கலங்கியதாகி சேற்றொடு பொருந்திய சிறுமை உடையதாயினும் அதன் பக்கத்தில் பலவேறு திசைகளினின்றும் மக்கள் அடிக்கடி வந்து வந்து நீருண்டு மீளுவதால் உண்டாகும் சிறிய கொடி வழிகள் பலவாகி யிருக்கும்.' இக் கருத்து,

ஈயென இரத்தல் இழிந்தன்
றதனெதிர்
ஈயே னென்றல் அதனினு
மிழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல்
உயர்ந்தன் றதனெதிர்
கொள்ளே னென்றல் அதனினும்
உயர்ந்தன்று
தெண்ணீர்ப் பரப்பின்
இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட்
டோரே
ஆவு மாவுஞ் சென்றுணக்
கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத்
தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல
வாகும்
. . . .
புறம். 204

என்ற பாடலில் விளக்கப்பட் டிருகிறது.

ஈயென இரப்பது இழிவாகக் கருதப்படினும். வாழ வகையற்றவராகிய,

காணார் கேளார் கான்முடப்
பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிகடுக்...
...ணச்

ஆகிய இத் திறத்தவர் பிறரிட... சென்று தம் உயிர்வாழ இரக்காமற் காலங்கடத்துதல் எங்ஙனம் கூடும்! ஆகவே இங்ஙனம் சிறுமையுற்றுத் தாழ்ந்தோருக்குத் தம்மால் ஆன

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

நற்றிணை ‘அழகு’

[R. G. பிள்ளை B. A.,]

தலைமகன் பொருள் தேடும் நிமித்தம் தலைமகளைப் பிரியக்கருதி அவள்பால் நெருங்கினான். தான் பிரிவதைக் குறித்து அவன் விரைவாகச் சொன்ன வார்த்தைகளைத் தலைவி கேட்டாள். கேட்டவள், அவனுக்கு எதிர் மொழி கூறாளாய் அவனை நோக்கி மென்மெல நடந்து சென்று, மனங் கலங்கி, நெடிது நினைந்து, அவன் மீது விழுந்தாள். அதைக்கண்ட தலைமகன் தான் பொருள் வயிற் செல்வதை யொழித்து. அவளுடன் புணர்ந்து இன்புற்றான். இந் நிகழ்ச்சியைத் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லி ஆறுதலடைகிறான்.

“பொருள் தேட நான் விரைவிற் செல்ல வேண்டும் என்ற சொற்களை அவள் விரும்பிக் கேட்டாள் அவை அவள் செவியிற் புகுதலும், மலர் போன்ற அவளது மை தீட்டிய கண்கள் நீரை உகுத்தன. அவள் வருந்துவதைக் கண்ட யான் என் அன்புள்ளத்தோடு அருண் மொழிகளைக் கூறி அவளைப் பலபடப் பாராட்டினேன். என் பாராட்டுரைக்கு அவள் பதில் கூற முடியாமல் நாணித் தலைகுனிந்தாள். வருந்தியதோடு நின்று விடுவளோ வென்று நான் நினைத்தேன். அவள் என் பிரிவிற் கிணங்காமையால் மென்மெல அடி வைத்து, என்னி[illegible] வந்தாள். அவள் அவ்வாறு [illegible]தைக் கண்ட யான், என்னை [illegible]தாயினும் வினவுவளோ, அல்லது தடுப்பளோ, என ஐயுற்றேன் அவள் என்னொடு பேசவுமில்லை; என்னைத் தடுக்கவும் இல்லை. இயக்கும் பொறியழிந்த பாவை போற் கலங்கி, நெடு நேரம் நினைந்து நின்றபின், அவள் என் உடம்பின் மீது சாய்ந்து விழுந்தாள். அவ்வாறவள் விழுவதைக் கண்ட யான் பொருள் வயிற் பிரிவதை அறவே மறந்தேன். என் நெஞ்சம் அவளுடன் ஒன்று பட்டுக் கரைந்தது. ஆதலின் அவளைப் பிரிவது இனி எங்ஙனம் கூடும்”? என்னும் தலைமகன் றன் கூற்றைப் பின்வரும் ‘நற்றிணைச்’ செய்யுள் விளக்குகின்றது:—

“செலவி ரைவுற்ற வரவம் போற்றி
மலரே ருண்கண் பனிவர வாயிழை
யாந்தற் கறையவு நாணினள்
வருவோள்
வேண்டா மையின் மென்மெல வந்து
வினவலுந் தகைத்தலுஞ்
செல்லாளாகி
வெறிகமழ் துறு முடிதயங்க
நல்வினைப்
பொறியழி பாவையிற் கலங்கி
நெடிதுநினைந்
தாக மடைதந் தோளே யது கண்
டீர்மட் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற்கேற் றாங்கெம்
பொருண்மலி நெஞ்சம் புணர்ந்து
வந் தன்றே.”

அரவம் என்பது ஒலியாகும். தலைவியை நோக்கிப் பேசாத தலைவன்றன் சொற்களை அரவம் என்றமை ஆசிரியரது சொல் நயத்தைக் காட்டுகின்றது. அவ்வாறு அவன் பேசாமைக்குக் காரணம் செல்லுதலின் விரைவாகலான் ‘செலவிரைவுற்ற அரவம்’ என்றார். தன்னை நோக்கிப் பேசானாயினும், தன்னைப் பிரியுங் குறிப்புடன் எழுந்த சொற்களானமையின், அவற்றை விரும்பிக் கேட்டாள் எனவே, ‘அரவம் போற்றி’ என்றார்.

‘ஆயிழை யாந்தற் கறையவும் நாணினள்’ என்னுஞ் சொற்றொடர், பொருள் செய்வதற்கு மிக்க கடினமாகத் தோன்றுகிறது. தனக்கு என்பது ‘தற்கு’ எனத் திரிந்தது. யான் ஆயிழை தனக்கு அறையவும், அதற்கு ஆயிழை அறையவும் நாணினள் எனப் பிரித்துக்கொண்டு, தலைமகன் பலபடப் பாராட்டியும் அவனுக்குப் பதில் கூற முடியாது தலைமகள் நாணினாள் என்று நற்றிணைக்கு உரை யெழுதிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் இச் சொற்றொடருக்குப் பொருளுரைத்தமை போற்றற்குரியது.

தலைவனுடைய பாராட்டுரைக்குப் பதில் கூற முடியாது தலைவி நாணித் தலை குனிந்ததன்கண் அவள் தலைவனை எதிர் நோக்கி வரும் குறிப்புத் தோன்றிற் றென்பார் ‘நாணினள் வருவோள்’ என்றார். காதலன் பாராட்டுரைக்குப் பதில் கூற வொட்டாது அவளைத் தடுத்த நாணம் அவள் அவனை நோக்கிச் செல்வதையும் தடுத்து நின்றது. தலைவன் தன்னைப் பிரிவதைச் சிறிதும் வேண்டாத அவள் நெஞ்சம் அவளை அவன்பால் ஈர்த்தது. பிரிவஞ்சிய நெஞ்சம் நாணத்தை வென்றது. நாணம் ஒருபால் தடுக்க, பிரிவை வேண்டாத நெஞ்சம் அவளை மறுபால் ஈர்க்க, அவள் நடை மெலிந்த தென்பார் ‘நாணினள் வருவோள் வேண்டாமையின் மென்மெல வந்து’ என்றார். திருவாரூர்க் கமலாலயத்தில் சுந்தரரைக் கண்ட பரவையாரின் நிலையைப் பேச வந்த சேக்கிழார் தாம் இயற்றிய பெரிய புராணத்தில்,

“அண்ணலவன் தன்மருங்கே
அளவிறந்த காதலிறல்
உள்நிறையும் குணம் நான்கும்
ஒருபுடை சாய்ந்தன எனினும்
வண்ணமலர்க் கருங்கூந்தல்
மடக்கொடியை வலிதாக்கிக்
கண்ணுதலைத் தொழும் அன்பே
கைக்கொண்டு செலவுய்ப்ப.”

எனப்பாடியமை ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. இம் முறையான் தலைவியின் நாணம் எடுத்துக் காட்டப்பட்டது.

அடிமேலடிவைத்து வருகின்ற தலைவி, “நீ எங்குச் செல்கின்றாய்? என் செல்கின்றாய்? என்னை நீ பிரிந்து செல்வது தகுதியோ?” என்றெல்லாம் தலைவனை நோக்கிக் கேட்டிருக்கலாம். எக் காரணம் பற்றியும் தன்னை விட்டுப் பிரியக்கூடாதென்று

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

“எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.”
—புறநானூறு.

இலை	கர, ஆடி,	தளிர்
3	20-7-51 வெள்ளி	40

சொல்லும் - - - - செயலும்

வேற்றவர் ஆட்சித் தளையி னின்று நாம் விடுதலை பெற்று விட்டோம். மொழி, கலை, தொழில் நாகரிகங்கள் முன் பிருந்த அளவினும் பன்மடங்கு முன்னேற்றம் அடையும் என்று எதிர்பார்க்கிறோம். கலை மன்றங் கள், பொது மேடைகள் ஆகிய இடங்களில் வளமான, பொலி மான எதிர் காலங்களைக் குறித்து உறுதி கிடைக்கின்றது. இன்பக் கனவுகளில் துன்பமின்றி வாழ வகைகள் நினைக்கின்றோம்.

நம்மை நாமே ஆளத் தொடங்கி விட்டோம். ஆண்டு வருகிறோம். ஆனால், சொல்லி யவைகளைச் செயலளவில் கொண்டு வருவதற்குக் கூட வில்லை. மொழி, கலை, தொழில் கள் எவ்வளவோ வளரவேண்டி யிருக்கின்றன. எடுத்துக் காட் டாக, இன்று நம் தமிழ் மொழி உள்ள நிலையைக் கருதிப் பாருங் கள். அவைகள் முன்னேற்றம் அடைந்தன என்று சொல்ல இடமில்லை. மேனாட்டார் ஆங்கில மொழியைப் பல துறையினும் சிறப்புற வளர்த்து வருகிறார்கள். விஞ்ஞானம், கணிதம், வான நூல், கட்டிட ஆராய்ச்சி, மருத் துவம் என்பன போன்ற எத் தனையோ வடிவங்களில் மொழி யின் சிறப்பை வளர்த்து வருகின் றார்கள். மக்கள் உள்ளம் ஒரு திறப்பட்டதன்று. வெவ்வேறு போக்கில் விருப்பமான வகை யில் செல்லும் இயல்புடையது. அவ் வியல்புக்குத் தக்கபடி வேறு வேறு கலை நுட்பங்களைப் பின் பற்றிப் பயின்று அதன் பயனாக மொழிப் புலமையும் அடையக் கூடிய வாய்ப்பு மேனாட்டாருக்கு இருப்பது போல் நம்மவர்க்கு இல்லை.

இலக்கியம் இலக்கணம் என் னும் இருதிறப் பகுதிகளாற்றான் மொழிப் புலமை அடையலாம் என்ற நிலை இங்கிருக்கின்றது. வேறு எத்தனையோ வகைகளில் தமிழை முன்னேறச் செய்திருக் கிறோம் என்று எளிதில் கூறுவர். ஆனாலும் செயலளவில் அவ்வள வும் இடர்ப் பாட்டில் முடிந்திருக் கும் நிலை சிறிது உற்று நோக்கிற் புலனாகும்.

எடுத்துக் காட்டாக, உயர் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞானம், வரலாறு கணிதம் உலக நூல் என்னும் கலைப் பாடங்கள் இன்று தமிழில் சொல்லப்படுவது தமிழ் வளர்ச்சியைக் குறிக்க வில்லையா? என்னும் கேள்வி எழலாம். ஆனால் இன்றுள்ள விஞ்ஞான முதலிய நூல்கள் தமிழ் என்னும் போர்வையில் நின்று தமிழ் அல்லாத மொழியில் இயங்கி வருகின்றன. எல்லா நூல்களை யும் தமிழ் எழுத்தில் எழுதுவது படிப்பது என்னும் செயல்களே தமிழ் மொழியை வளர்த்து விடாது. எழுத்து தமிழாயிருந்து விட்டால் போதுமா? அம்மாதிரி தமிழ் பரப்புதற்குப் பல்லாயிரக் கணக்கில் இப்போது நாட்டில் உலவிவரும் செய்தித் தாள்களே கூடப் போதும்.

உண்மையில் கலை நூல்கள் வாயிலாகத் தமிழ் வளரவேண்டு மானால், அவை நல்ல தமிழில் அதாவது எளிமையோடு இனி மையும் வாய்ந்த தமிழில், பெரும் பாலும் தூய தமிழில் எழுதப் படல் வேண்டும். நல்லறிஞர் அடங்கிய ஆய்வுக்குழு ஒன்று அமைத்து அரசியலார் இம்மாதிரி நூல்கள் வெளிவருமாறு செய் வது நல்லது. அழகும் தூய்மை யும் வாய்ந்த நற் கலை நூல்கள் தமிழில் இல்லை என்ற குறை மறைந்தொழிய ஆவன செய்ய ஆட்சியாளரே பொறுப்பாய் விரைய வேண்டும்.

மேலும், இத்தகைய கலை நூல் களைத் தமிழ்க் கல்லூரியிற் கல்வி பயிலும் வித்துவான் வகுப்பு மாணவர்க்கு வைக்க, தக்க வச திகள் செய்வித்தலும் வேண்டும். பல்கிப் பரந்துகிடக்கும் தமிழ் இலக்கியப் பாடத் திட்டங்களில் சில சுருக்கிக் கொண்டு இவை களையும் உடனாகப் பயிலும்படி செய்வித்தால், பயின்று வெளி வரும் தமிழ்ப் புலவருக்குப் பிற் காலத்தில் எவ்வளவோ நன்மை ஏற்பட இடமுண்டு.

ஆங்கிலத்தில், கட்டுரை யாக் கம், அரிய பெரிய உரை நடை வளங்கள் முதலியன கா[illegible] பெறுகின்றன. தமிழிற் புல[illegible] பெறுவார் இந்த ஆங்கில நன் முறைகளும் பயில வசதிகள் செய்யப் பெறுமானால் அவர் களுக்கு எத்தனையோ வழிகளில் உதவியாக இருக்கும்.

உயர்நிலைப் பள்ளிகளில் அடிப் படையாக, நல்ல வகையில் தமிழ் இலக்கண அறிவு வாயப் பெறு மானால் கல்லூரிகளில் இலக்கண நூல்களில் இடர் பெரிதும் இராது. கல்லூரி மாணவர்கள் எழுதுவது பேசுவது முதலான வற்றில் எண்ணற்ற தவறுகள் உண்டாகின்றன. அதற்காக உயர் நிலைப் பள்ளிகளிலேயே

தக்க நிலையில் பயன் பெறக் கூடிய வழியில் மாணவர்க்கு இலக்கண அறிவு உண்டாக்க வசதிகள் ஏற்படுத்துவது நல்லது. இம் மாதிரி அடிப்படைக் கல்வி கற்பவர் பிற்காலத்தில் நல்ல புலமை பெற்று மேலு மேலும் கலை யார்வத்தில் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆசியல் அறிக்கை ஒன்று **'Wren and Martin'** என்னும் ஆங்கில ஆசிரியர்கள் எழுதிய இலக்கண நூலில் குறித்துள்ளவைகளைப் பின்பற்றித் தமிழாசிரியர்கள் மாணவர்க்குக் கட்டுரைகள் எழுதச் சொல்லித் தரலாம் என்று தெரிவிக்கின்றது. தமிழ்ப் புலவர்க்கு வித்வான் வகுப்பிலேயே இதற்குப் பயிற்சி முறை இன்றி யமையாதது.

தமிழ் வளர்ச்சியில் அனைவர்க்கும் சொல்லும் செயலும் ஒத்திருப்பது நாட்டின் விரைந்த ...ச்சிக்கு ஏற்றது.

உரை நடை நூல்கள்

நூல்களைக் கருத்தூன்றிப் பயிலும்போது, பயில்வோர்க்கு உள்ளத்தைச் சென்று தொடும் வகையில் உரை நடை அமைவது நல்லது. தமிழ் மொழியில் இத்தகைய உரை நடை நூல்கள் பொதுவாக இல்லை என்றே குறிப்பிட வேண்டி யிருக்கிறது. தமிழ் மொழியில் மிகப் பழைய கால முதற்கொண்டு செய்யுணூல்கள் பெருகி வருவதைப் போன்று உரை நடை நூல்கள் பெருகவில்லை. ஆசிரியர் நக்கீரனார் தம் 'இறையனார் அகப்பொருள் உரை'யினையே தமிழ் மொழிக்கண் தோன்றிய முதல் உரை நடை யென்று சொல்ல வேண்டி யிருக்கிறது. நடை வளமும் பொருள் ஆழமும் மிக்க இறையனா களவியல் உரை, தொல்காப்பிய முதலான சங்க நூல் உரைகள் என்பன நுண்மாண் நுழை புலம் வாய்த்த அறிஞர் பெருமக்களுக்கு மட்டும் இன்பம் ஊட்டத்தக்க நிலையில் இருப்பது உண்மை தான். ஆனால், சிறிது கற்றறிந்த மக்கள் எல்லார்க்கும் ஒரு சேர இன்பம் தரத்தக்க நிலையில் அவ்வுரை நூல்கள் அமையவில்லை.

மேற்றிசை மொழிகளில் சிறந்த உரை நூல்கள் பல உள்ளன. ஆங்கிலப் பேராசிரியர்களான சார்லஸ் டிக்கன்ஸ், பீச்சர் ஸ்டோவ் ஆகியோர் இயற்றிய, **(A Tale of two cities, Uncle Tom's Cabin,)** நூல்களும், பிரஞ்சு நூலாசிரியரான விக்டர் ஹியூகோவின் ஏழைபடும் பாடு **(Les Misarables)** என்னும் நூலும் தம் உரை நடைப் போக்கிலேயே, படிப்பவர்தம் உள்ளத்தைத் தம்பால் ஈர்த்து இன்பம் அளிக்கத் தக்க நிலையில் உள்ளதை யாவரும் நன்கறிவர். இன்னும் எண்ணில் அடங்காத உரை நடை நூல்கள் மேற்றிசை மொழிகளில் உள்ளன. பொதுவிற் சொல்லுமிடத்து, அவ்வுரை நடை நூல்களே அந்நாட்டு நாகரிகத்தைப் படிப்படியாக உயர்த்தி உச்ச நிலையிற் கொண்டு சென்ற ஏணிப்படிகள் என்று கருதலாம்.

உள்ளத்தில் இன்பம், அவலம், வீரம், நகை முதலிய சுவைகளைத் தக்க நிலையில் தோற்றித் தம் வயமாக்க வல்ல உரை நடை இலக்கியங்கள் தமிழில் பெரும்பாலும் இல்லை என்று திட்டமாகக் கூறி விடலாம். செய்யுள் இலக்கியங்களில், மட்டும் இச் சுவைகள் ஆங்காங்குக் காணப்படுகின்றன. நம் நாட்டுக்கு, நல்ல தமிழில் நெஞ்சை அள்ளும் சுவைமிக்க உரை நடை நூல்கள் மிக முதன்மையாகத் தேவை. அவை கதை நூல்களாகவும் இருக்கலாம் ஆனால் மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத கருத்துக்களோடும் நெஞ்சைத் தொட்டீர்க்கும் நிலையில் அவை விளங்கவேண்டும். இலக்கணப் பிழைகள் மிகுந்தும், தொடர்கள் முன்னுக்குப் பின் முரணாகவும், கருத்துக்கள் சிதைந்தும் குறுகியும் பெருகியும் இடர்ப்பட்ட நிலையில் உரை நடை நூல்கள் புதுக்கதைகள் கற்பனைக் கதைகள் மறுமலர்ச்சி நூல்கள் என்றெல்லாம் போர்வை தரித்து நாட்டில் உலவி, மக்கள் கருத்தில் நச்சுவிதை ஊன்றும்படி விட்டு வைத்தல் மிகவும் தீமை பயக்கக் கூடிய செயல் என்று அறிஞர் உலகம் கருதி ஆவன புரிய விரைதல் நலமாகும்.

[3-ம் பக்கம் தொடர்ச்சி]

அவள் தலைவனைத் தடுத்திருக்கலாம். இவ் விரண்டையும் அவள் செய்ய வில்லை என்பது தோன்ற ஆசிரியர் 'வினவலுந் தகைத்தலுஞ் செல்லா ளாகி' என்றமையால், தலைமகளது மடமைக் குணம் எடுத்துக் காட்டப் பட்டது. மடமையையுடைய பெண் மடந்தையாகிறாள். பேசாமை என்பதே மடமைக்குப் பொருளாகும். பேசாமடந்தை என்ற சொற்றொடரும் இப்பொருள் கொண்டெழுந்ததெனலாம். 'பெண்டிர்க்கழகு எதிர் பேசாதிருத்தல்' என்ற நறுந் தொகைச் சொற்கள் ஈண்டு குறித்தற் பாலன.

நாணித் தலை குனிந்து தலைவனருகில் வந்த தலைவி, தன் மடமைக் குணத்தால் வாய்விட்டுப் பேசலாற்றாளாகி, மனங்கலங்கி, நெடிது நினைந்தாள். என்றமையான், அவள் கொண்ட அச்சம் வெளியாயிற்று. மனக்கலக்கமும் ஆழ்ந்த சிந்தனையும் அச்சத்தின் பாற்படும்.

பெண்களின் இயற்குணங்கள் நான்கனுள் பயிர்ப்பு என்பது நான்காவதாகும். தன்னைத் தொட்டுப் பயிலுங் கணவனன்றிப் பிறர் தன்னை தீண்டுவாராயின் கற்புடைய மகள் அதனைத் தாங்க மாட்டாள். மகளிரின் தாங்க முடியாத அவ்வியல்பு தான் பயிர்ப்பு எனப்பட்டது. தலைவனது ஆகத்தின் மீது தலைவி சாய்ந்து விழுந்தாள் என்றமையால் பெண்களின் எதிர்மறைக் குணமாகிய பயிர்ப்பு உடன் பாட்டால் விளக்கப்பட்டது. எனவே, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நான்கு பெண்மைக் குணங்களையும் ஆசிரியர் இளங்கீரனார் தலைவியின் இயக்கத்திலமைத்துக் காட்டியது வியத்தற்குரியது. நாணத்தாற் தலைகுனிந்து, தன்னை நோக்கித் தலைமகள் மென்மெல வரும்பொழுது, அவள் கூந்தலினின்றெழுந்த நறுமணத்தை நுகர்ந்த தலைமகன் அவள் கொண்டையின் அழகொன்றையே காணமுடிந்தது. வாரிப் பின்னி முடிக்காமல் மயிரைத் திறுத்து (செறுகி) முடித்த கொண்டையை ஆசிரியர் 'துறுமுடி' என்றும், அக்கொண்டையின் அழகொன்றே தலைமகன் கண்களைக் கவர்ந்தன என்பார் 'துறுமுடி தயங்க' என்றும் கூறினர்.

இனி, ஆசிரியர் இச் செய்யுளிற் காட்டிய இரண்டு உவமைகளின் அழகைச் சிறிது ஆராய்வோம். தலைமகள் பேசமுடியாமற் கலங்கினாள் என்றவிடத்து ஆசிரியர் 'நல்வினைப் பொறியழி பாவையிற் கலங்கி' என்றார். பழங்காலத்தில் பொம்மலாட்டம் என்கிற பாவைக் கூத்தாட்டுவது வழக்கம். பாவைகளை அலங்கரித்துப் பல கயிறுகளால் அவற்றைத் தக்கவாறு பிணித்து, திரை மறைவில் இருந்து சூத்திரதாரி அவற்றை இயக்க, சிறு தூரத்திலிருந்து காண்போர்க்கு அப்பாவைகளின் ஆட்டம் உயிரோவியங்கள் ஆடுவன போலத் தோன்றும். அவற்றை இயக்குகின்ற கயிறுகளில் ஒன்று அறுபடுமானால், அதனாற் பிணிக்கப்பட்ட பாவை செயவின்றிக் கலங்கி வீழும். இயந்திரக் கயிறு அறுபட்ட பாவை போன்று தலைவன் பிரிவைக் கேட்ட தலைவி கலங்கினாள் என்று ஆசிரியர் காட்டிய உவமை மிக அழகு வாய்ந்தது.

தலைமகள் தன் மீது கலங்கி விழுதலும், தானும் உளமுருகி, அவளுடன் ஒன்றுபட்டுத் தலைமகனும் பொருள்வயிற் பிரிவை அகற்றி, உடனுறைந்து வந்தான் எனக் கூற வந்த ஆசிரியர்.

"ஈர்மட் செய்கை நீர்படு பசுங்கலம்
பெருமழைப் பெயற் கேற்றாங்கெம்
பொருண்மலி நெஞ்சம் புணர்ந்து
வந் தன்றே," என்றார்.

ஈரமண்ணாற் செய்யப்பட்டு, ஈரங் காயாத பசுமட் கலத்தில் மழை நீரைப் பெய்து வைத்தால் அந் நீரான் பசுமண் உருகி இரண்டும் ஒன்றுவது போல, தலைமகனுடைய இளகிய நெஞ்சம் அவன் ஆகத்தின் மீது விழுந்த தலைமகளின் மெல்லிய நீர்மையால் உருகி இருவரும் ஒன்றுபட்டார்கள் என்று ஆசிரியர் கூறிய உவமை யழகை நாம் உன்னி மகிழ்வோம். நற்றிணையில் உள்ள இவ்வுவமையையே பிற்காலத்து வந்த சருவூர்த் தேவர் தாமியற்றிய திருவிசைப்பாக்களில் இரண்டிடங்களில் அழகு படுத்திக் கூறியுள்ளார் என்பது பின்வரும் செய்யுளடிகளால் இனிது விளங்கும்.

"புனல்பட உருகி மண்டழல்
வெதும்பிப் பூம்புனல்
பொதிந் தயி ரளிக்கும், வினைபடு
நிறைபோல் நிறைந்தவே
தகத்தென் மனம் நெக
மகிழ்ந்தபே ரொளியே."
திருமுகத்தலை

"எழிலையாழ் செய்கைப் பசுங்
கலன் விசும்பின் இன் துளி
படநனைந் துருகி, அழலையாழ்
புருவம் புனலொடுங் கிடந்தாங்கு'
திருவிடைமருதூர்.

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

கனியாத காய்

[அ. தீ. வீரராகவன்]

மரங்கள் பசிய இலைகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. அவைகளில் காய்களும் பூக்களும் நிறைந்துள்ளன. அவைகளில் வசிக்கும் குயிலின் இனிய இசை குவலயத்தைக் குதூகலிக்கச் செய்கிறது. அம் மரங்களினூடே வரும் தென்றல், மக்கள் உள்ளத்தில் சொல்லொணு மகிழ்ச்சி உண்டு பண்ணுகிறது — இன்பகரமான நிலைதான்.

இதைப் போலத்தான் அரசுவின் வாழ்விலும் இன்பகரமான மாறுதல் ஏற்பட்டது. விருந்துண்டதற்கு அடுத்த நாள் முதற்கொண்டு அவன் விடுதியினின்றும் விலகிக்கொண்டான். அவன் தற்போது 'தனபாலி'ன் காரில் தான் கலாசாலைக்குச் செல்கிறுன். 'உணவு' 'படுக்கை' இரண்டும் டாக்டர் குமாரசாமி வீட்டில். சில சமயங்களில் நேராக தனபாலினுடைய வீட்டிற்கே வந்து விடுவான்.

பார்வதிக்கு வரவரக் கால் குணமாகிக்கொண்டு வந்தது. தற்போது பார்வதியும் அரசும் நன்ருகப் பழகினர். அவர்கள் பழகுவதை எவரும் தடுக்கவில்லை. சிறுவர் விளையாட்டாகிய ஓடிப் பிடிக்கும் விளையாட்டிலிருந்து வயதுக்கேற்ப வார்த்தைகள் பரிமாறிக் கொள்வது வரை இருவரும் கலந்து பழகினர்,

விடுமுறை நாட்களில் தனபாலின் வீட்டில்தான் அரசு இருப்பான் என்று நிச்சயமாகக் கூறி விடலாம். நெல்லுக்குள் அரிசி இருக்கும் என்று கூறுவதைப் போல.

பார்வதியின் படிப்பு உடனேயே நிறுத்தப்பட்டு விட்டது. காலும் தற்போது முழுதும் குணமாகி விட்டது. தற்போது, பார்வதியும் அரசுவும் சுதந்திரக்கிளிகள்.

மணிக்கு விடுமுறை விட்டவுடனே வேலாயுதமும் மணியும் சென்னைக்கு வந்தனர். மணியை வைத்தியக் கல்லூரியில் சேர்ப்பதற்குத்தான் வேலாயுதமும் வந்திருந்தார். கையில் அக் காகிதச் சுருளையும் உடன் எடுத்து வந்திருந்தார். அதைத் தம் நண்பருக்குக் காண்பித்து உண்மையை விளக்கலாம் என்ற எண்ணத்துடன்தான் அதை எடுத்து வந்திருந்தார்.

வேலாயுதமும் குமாரசாமியும் நெடு நாட்களுக்குப் பின் சந்திக்கவே இருவரும் இன்பமான வார்த்தை பேசிக்கொண்டிருந்தனர். 'அரசைப்' பற்றிய பேச்சு எழுந்தது. அக் காகிதச் சுருளையும், அதனுள் இருக்கும் புகைப்படத்தையும் காண்பித்து வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தனர். பிறகு குமாரசாமி அக் காகிதச் சுருளையும் மோதிரத்தையும் தாம் வாங்கி வைத்துக் கொண்டார். நண்பர்கள் இருவரும் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்கள் போல் தோன்றினர். மணியைக் கலாசாலையில் சேர்ப்பதற்குக் குமாரசாமியிடம் ஏற்பாடு செய்து விட்டு வேலாயுதம் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு இலங்கைக்குக் கப்பல் ஏறிவிட்டார்.

வேலாயுதத்தின் மகனென்று அரசு என்பதை அறிந்து கொண்டார் குமாரசாமி. அவர் மேன்மேலும் அரசுவிடம் மதிப்புக்கொள்ள ஆரம்பித்தார். அவனுடைய உண்மையான பெற்ருேர் எவரென்றும் அறிய வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் உண்டாகியது.

வைத்தியருக்கு மட்டும் தான் 'அரசு' மணியின் உடன் பிறந்தானல்ல என்பது தெரியும். மணிக்கும் தெரியாது, தனபாலுக்கும் தெரியாது.

இப்போதெல்லாம் மணியும் அரசும் சேர்ந்தே தனபாலினுடைய வீட்டிற்குப் போவது வழக்கம். மணியிடமும் மங்கையர்க்கரசி முதலியோர் நன்ருகத்தான் பழகினர். 'அரசு'வுக்குக் கல்லூரி விடுமுறை முடியும் தருணம். இன்னும் பத்து நாட்கள் தாம் இருந்தன. பார்வதிக்கும் அரசுவுக்கும் உண்மையில் ஒருவரையொருவர் மணந்துகொள்ள வேண்டும் என்ற திட எண்ணம், உள்ளூர வளர்ந்து கொண்டே வந்தது — உள்ளுக்குள் புகைந்து கொண்டிருக்கும் எரி மலையைப்போல எரி மலை வெடித்தால் இன்பமா? துன்பமா?

தனபாலுவும் குமாரசாமியும் அன்று வெகுநேரம் பேசினர் அந்த மோதிரத்தைக் காண்பித்தார் குமாரசாமி. ஏதோ கிடைத்தற்கரிய நிதியைக் கண்டவர்போல் தனபாலினுடைய கண்கள் மலர்ந்தன. அதிக மகிழ்ச்சி துக்கத்திற்கு அறிகுறிதானே!

அன்று மணிக்குக் கடுமையான தலைவலி. குமாரசாமி ஏதோ மருந்து கொடுத்தார். பகல் வேளை. நன்ருகத் தூங்கிப் போய்விட்டான். அரசு தனபாலுனுடைய வீட்டுக்குச் சென்றிருந்தான்.

அப்போதுதான் பார்வதி 'நற்றிணை'யைக் கையில் வைத்துக் கொண்டு, அதில் கபிலரால் எழுதப்பட்ட ஒரு பாட்டைப் படித்து,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

கைத்தறி ஆடைகள்

வணிகக் குறி!

—N. K. M.—

தங்க நாடா

(பதிவு)

எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.

நூலாடைகட்கும் பட்டாடைகட்கும்

நம்பிக்கையான இடம்:

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,

துணி வாணிபம்,

53, கிடங்குத் தெரு, சென்னை 1.

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

வற்றை ஈந்து காத்தலைத் தம் கடமை என்று செல்வ ராவார் கருதுவாராயின் நாடு நாடாக வளம் பெற்றுச் சிறக்கும் என்று சொல்லவும் வேண்டுமா! ஆனால் உவர்க்கடல் அன்ன செல்வர் பலர் இந்நாட்களில் மிகுந்து கொண்டே வருகிறார்கள். செல்வத்தை நல்லாற்றுப் படுத்தி அவர்களுக்கு மறுமை யின்பத்தை அளிக்க வல்லதாகிய அருட் பண்பு மட்டும் நாட்டிற் படிப்படியாகக் குறைந்து கொண்டே போகின்றது. வீண் ஆரவாரமான வெறுஞ் செயல்களுக் கெல்லாம் பொருள்கள் அளவின்றிச் செலவழிக்கப்படுகின்றன. மறுமையினும் இன்பம் அளிக்க வல்ல ஈகையின் சிறப்பினை எண்ணிப் பார்ப்பதற்கும் நேரமின்றிச் செல்வ மிக்கவர் தம் நாட்களைப் பலவேறு வீண் செயல்களிற் செலவிடுகின்றனர்.

திருவள்ளுவர் முதலான அருட் சான்றோர் பலரும் ஈகையின் சிறப்பினை மக்கள் உள்ளத்தில் இடம் பெற வைக்க எவ்வளவோ முயன்றிருக்கிறார்கள். முன் நாட்களில் அருட்பண்பு நாட்டில் தழைத்து ஆட்சியுற்றிருந்ததால் ஈகையின் பெரும்பயனை மக்கள் சிந்திப்பதற்கு வேண்டிய முதன்மை தோன்றவில்லை. ஆனால் இப்போதிருக்கும் நிலையில் அவ்வருட் சான்றோர்களுடைய மாண்புடைக் கருத்துக்களைப் பன்முறையும் சிந்தித்துச் செயன்முறையில் அவைகளைப் பயன்படுத்தி நாட்டின் நலங்காண விரைய வேண்டியிருக்கிறது.

புகழுக்காக எது வேண்டுமானாலும் செய்யலாம் என்ற வீண் எண்ணம் மக்களிடையில் ஒழிய வேண்டும். ஈகையைத்தவிர வேறு எச்செயலும் புகழைத் தேடித் தரவல்லன வல்ல. திருவள்ளுவர் 'புகழ்' என்னும் அதிகாரத்தில் முதற்கண், 'ஈதல் இசைபட வாழ்தல்' என்று கூறுகின்றார். 'இசைபட வாழ்தலுக்குக் கல்வி ஆண்மை முதலிய பிறகாரணங்களு[ம்] உளவேனும் 'உணவின் பிண்டம் உண்டி முதற்று' ஆகலின் ஈதல் சிறந்ததென்பதற்கு ஞாபகமாக ஈதல் என்றார்' என்று பரிமேலழகர் அதற்கு உரை கூறுவதினின்று இசைபட வாழ்தலுக்கு ஈகை ஒன்றே சிறந்த வழி என்பது விளங்குகின்றது. இதனை வற்புறுத்துவதற்கே அடுத்த குறளில்,

உரைப்பார் உரைப்பவை எல்லாம்
இரப்பார்க் கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்—என்று

வறுமையால் இரப்பார்க்கு இல்லையென்னாது எடுத்தீயும் பண்புடையாளருக்கே உலகத்தவர் கூறும் புகழ் மொழிகள் சென்று சேரும் என்பது விளக்கப் பெறுகின்றது.

தம்மிடம் இரப்பவர்க்குப் பொருள் வடிவில் ஏதாவது கொடுப்பதை விட அவர்களுடைய பசித்துன்பம் ஒழிய உணவீந்து காத்தல், ஈகையுள் எல்லாம் முதன்மையாகவும் சிறந்ததாகவும் கருதக் கூடியதாகும். இன்றியமையாத நெருக்கடியில் பொருள் உதவி பெறுபவர் கூட ஒரோவொரு கால் தமக்குப் பொருள் ஈந்தவரை மறத்தல் கூடும். தாம் பெற்ற பொருட் கொடையைத் தீய வழியிற் செலவழித்து அதனால் தமக்கும் தமக்குப் பொருளீந்தவருக்கும் பாவம் திரட்டுதல் கூடும். ஆனால் பசித் துன்பம் போக்க முன் வந்து உதவுவோர்களை எத்தகையோரும் எந்நாளிலும் மறத்தற் கியலாது. 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று முன்னோர் கூறியிருப்பதினின்றும் உணவு தருதல் எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்று அறியலாம். மற்றும் பொருள் பெறுங்கால் காணப்பெறாத மகிழ்ச்சியும் இன்பமும், பசிபோகப் பெற்ற இரவலர் முகத்தில் நாம் பார்த்தல் கூடும். பசியால் மெலிந்து வந்து தம்மிடம் யாசிப்பவருக்குப் பசி நோய் ஒழியும் படி உணவீந்து அவர் தம் மகிழ்ச்சி [illegible]முகத்தைப் [illegible]பார்த்து உள் [illegible] தம சிறந்த பேறாகப் பண்டைச் சான்றோர் கருதினர். ஆபுத்திரன் என்பான் இய்மர்திரி மகிழ்ச்சிக்கு இடம் இல்லாத துறக்க நாட்டைத் தன் உள்ளத்தில் துச்சமாகக் கருதினான் என்று அறிகிறோம்.

அறஞ்செய் மாக்கள் புறங்காத்
தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற
முயல்வோர்
யாவரு மில்லாத் தேவர் நன்னாட்டுக்
இறைவ னாகிய பெருவிறல் வேந்தே
வருந்தி வந்தோ ரரும்பசி களைந்தவர்
திருந்துமுகம் காட்டும் என்
தெய்வக் கடிஞை (மணிமேகலை)

ஆகவே இந்நிலையில் வறியாருக்குப் பசி போக்கி அதன் பின்னர் தம்மால் ஆவன உதவி அவருடைய திருந்திய இன்முகங் காணும் இன்பத்தினைச் செல்வ ராவார் பலரும் இழந்து விடாமல் நுகர்வது நல்லது. பொருள் படைத்ததற்குத் தக்க பயன் அஃதொன்றே ஆகும்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

அதன் பொருளின் இனிமை[illegible]ணச் மனதுக்குள் மகிழ்ச்சி யடை[illegible]தாள்.

“தினைப்புனக் காவல் செய்யும் நங்கை யொருத்தி. இளமையழகு அவளிடம் பூத்துக் குலுங்குகிறது. ஒரு நாள் ஓர் ஆடவன் அங்கு வருகிறான். 'விரோதத்திலிருந்து அன்பு பெருகும்' என்பதற்கேற்ப, இருவர் மனத்திலும் அன்பு அரும்பிற்று. அடிக்கடி தம் பெற்றோருக்குத் தெரியாமல் அவ் வாடவனைச் சந்திப்பாள் அவ் வணங்கு. அந்தத் தினைப்புனத்திலே ஒரு வேங்கை மரம். அதிலே ஊஞ்சல் ஒன்று இருக்கும்.

[தொடரும்]

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.).